இந்து தமிழ் திசை
தமிழால் இணைவோம்
சென்னை / காஞ்சிபுரம் பதிப்பு • செவ்வாய், நவம்பர் 10, 2020
ரை, திருச்சி, திருவனந்தபுரம், பெங்களூரு, திருப்பதி •




▸▸ பல்லாவரம் வேல்ஸ் பல்கலைக்கழகத்தின் 10-வது பட்டமளிப்பு விழாவில் புதுடெல்லி தேசிய தர மதிப்பீட்டுக் குழுவின் செயல் தலைவர் பேராசிரியர் வீரேந்திர சிங் சவுகான் பங்கேற்று பட்டங்களை வழங்கினார். உடன் வேந்தர் ஐசரி கே.கணேஷ், இணை வேந்தர் (திட்டம் மற்றும் வளர்ச்சி) ஆ.ஜோதி முருகன், வேல்ஸ் குழும துணைத் தலைவர் ஆர்த்தி கணேஷ் உள்ளிட்டோர்.

# வேல்ஸ் பல்கலைக்கழகத்தின் 10-வது பட்டமளிப்பு விழா

■ சென்னை

பல்லாவரம் வேல்ஸ் பல்கலைக் கழகத்தின் 10-வது பட்டமளிப்பு விழாவில் 2,800 மாணவ, மாணவிகள் இணையவழியில் பட்டங்களைப் பெற்றனர்.

இதுகுறித்து வெளியாகியுள்ள செய்திக்குறிப்பு: வேல்ஸ் பல் கலை. 10-வது பட்டமளிப்பு விழா நேற்று நடைபெற்றது. வேந்தர் ஐசரி கே.கணேஷ் தலைமை தாங்கினார்.

சிறப்பு விருந்தினராக புது டெல்லிதேசிய தரமதிப்பீட்டுக்குழு வின் செயல் தலைவர் பேராசிரி யர் வீரேந்திர சிங் சவுகான் நேரில் கலந்துகொண்டு, தங்கப்பதக்கம் பெற்ற மாணவர்களுக்கும், முனை வர் பட்ட மாணவர்களுக்கும் சமூக இடைவெளியோடு பட்டங்களை வழங்கி உரையாற்றினார்.

அவர் கூறும்போது, "கல்வி என்பது பட்டம் பெற மட்டுமல்ல, நாம் சார்ந்த சமுதாயத்தையும் நாட்டையும் உயர்த்த வாழ்நாள் முழுவதும் நல்வழிகளை கடை பிடிக்கவும் பயன்படுத்த வேண் டும்" என்றார்.

இணை வேந்தர் (திட்டம் மற்றும் வளர்ச்சி) ஆ.ஜோதி முருகன், வேல்ஸ் குழும துணைத் தலை வர் ஆர்த்தி கணேஷ், பல்கலை. துணைத் தலைவர் ப்ரீத்தா கணேஷ், துணை வேந்தர் ஸ்ரீமன்நாராயணன உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

CM

**10.11.2020 – TUE.** **Pg.No. 3**